අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
**Ministry of Education, Higher Education and Vocational Education**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය - 2025 (2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை - 2025 (2026)
General Certificate of Education (Ord. Level) Examination - 2025 (2026)

# පුරවැසි අධ්‍යාපනය
# Civic Education - குடியியற் கல்வி

## අනුහුරු ප්‍රශ්න පත්‍රය (දෙමළ මාධ්‍යය)
## பயிற்சி வினாத்தாள்
## Practice Paper




**Question Paper - I, II** | ප්‍රශ්න පත්‍රය - I, II (දෙමළ මාධ්‍යය)

**අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය**
**ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව**
**கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு**
**Ministry of Education, Higher Education and Vocational Education**
**National Languages and Humanities Branch**

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

| 62 | T | I |
|---|---|---|

අ. පො. ස. සාමාන්‍ය පෙළ විභාගය (අනුහුරු ප්‍රශ්න පත්‍රය ) - 2025 (2026)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை (பயிற்சி வினாத்தாள்) – 2025 (2026)
General certificate of Education (ord. Level) Examination (Practice Paper) - 2025 (2026)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

පැය තුනයි.
மூன்று மணித்தியாலம்
Three Hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## குடியியற் கல்வி - I

கவனத்திற்கு:
- எல்லா வினாக்களுக்கும் விடையெழுதுக.
- **1 தொடக்கம் 40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **(1), (2), (3), (4)** என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடைக்குரிய இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே **புள்ளடியை (x)** இடுக.
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து அவற்றைப் பின்பற்றுக.

1. இலங்கையில் அதிக எண்ணிக்கையான வாக்காளர்களைக் கொண்டுள்ள தேர்தல் மாவட்டம் எது?
(1) கொழும்பு (2) குருணாகல் (3) கம்பஹா (4) கண்டி

2. உற்பத்தி நடவடிக்கைகளின்போது முதலீடாக பயன்படுத்தப்படும் இயந்திர உபகரணங்களுக்காக வழங்கப்படும் கொடுப்பனவு யாது?
(1) வட்டி (2) கூலி (3) இலாபம் (4) சம்பளம்

3. 1924 ஆம் ஆண்டின் கிராம சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் கிராம சபைகளின் அதிகாரத்தை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட யாப்பு எது?
(1) சோல்பரி (2)டொனமூர் (3) குறூ மக்கலம் (4) மனிங்

4. தொழிலாளர் - தொழில்தருநர் ஆகிய இருதரப்பினருக்கிடையிலான மோதல் தீர்விற்குப் பொருத்தமான முறையாக அமைவது
(1) கலந்துரையாடல் (2) நடுநிலைமை (3) இணக்கப்பாடு (4) பேச்சுவார்த்தை

5. வெளிப்படையான மோதல் நிலைமைக்கு உதாரணமாக அமைவது
(1) தனி நபரினுள் ஏற்படும் உள முரண்பாடு (2) அயலவருக்கிடையிலான மோதல்
(3) குடும்ப மோதல் (4) இனங்களுக்கிடையிலான மோதல்

[இரண்டாம் பக்கத்தைப் பார்க்க

6. சூழலில் இருந்து கிடைக்கும் பொருளாதார உதவிச் சேவைகளுள் ஒன்று
(1) கனிய வளங்கள் (2) சூரிய ஒளி (3) காற்று (4) நீர்

7. மனிதன் தனது சமூக வாழ்க்கையை பூரணப்படுத்திக் கொள்வதற்காக சமூகத்தினால் வழங்கப்படுவது
(1) கடமைகள் (2) சமத்துவம் (3) உரிமைகள் (4) சுதந்திரம்

8. 1978 அரசியல் யாப்பின் கீழ் மாகாண சபையின் கொள்கைகளுக்கு அனுமதி வழங்குபவர்
(1) ஜனாதிபதி (2) சபாநாயகர் (3) ஆளுநர் (4) முதலமைச்சர்

9. அரசியல் அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட அதி உயர் சட்டமாகக் கருதப்படுவது
(1) மனித உரிமைகள் சட்டம் (2) அரசியல் யாப்புச் சட்டம்
(3)குற்றவியல் சட்டம் (4) சிவில் சட்டம்

10. “ஒருவருக்குத் தனது கைத்தடியை சுழற்றிக் கொண்டு தான் சுதந்திரத்துடன் தன் பாதையில் பயணம் செய்ய முடியும். ஆனால் அச்சுதந்திரம் அடுத்தவரின் மூக்கு நுனி வரை மட்டுமே ஆகும்”
(1) பேராசிரியர் காணர் (2) ஆப்ரகாம் இலிங்கன்
(3) ஹரல்ட் ஜே லஸ்கி (4) பீ.டீ.எச்.கோல்

11. நாட்டின் அபிவிருத்தியை அளவிடும் குறிகாட்டிகளுள் மனித அபிவிருத்திச் சுட்டியை (HDI) அளவிட பயன்படுத்தப்படும் கூறுகளுள் ஒன்று
(1) எழுத்தறிவு (2) கொள்வனவு சக்தி
(3) சிசு மரண வீதம் (4) ஆயுள் எதிர்ப்பார்ப்பு

12. நீதித் துறையின் சுதந்திரத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர்
(1) நீதியமைச்சர் (2) சட்டமா அதிபர்
(3) பிரதம நீதியரசர் (4) மாவட்ட ஆணையாளர்

13. இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள பொருளாதார முறை
(1) முதலாளித்துவ பொருளாதார முறை (2) சமதர்ம பொருளாதார முறை
(3) கலப்புப் பொருளாதார முறை (4) சந்தைப் பொருளாதார முறை

14. போதைப்பொருள் பாவனை தொடர்பான விடயங்களை இரகசியமாகவும் உடனடியாகவும் அறிவிப்பதற்கு இலங்கை அரசினால் அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொலைபேசி இலக்கம்
(1) 1818 (2) 1819 (3) 1987 (4) 1997

15. நேட்டோ (NATO) அமைப்பில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்வதை நோக்காகக் கொண்டு யுத்த மோதலில் ஈடுபட்ட இரு நாடுகள்
(1) இஸ்ரேல் - பாலஸ்தீனம் (2) ஈரான் - இஸ்ரேல்
(3) ரஷ்யா - யுக்ரேன் (4) இந்தியா - பாகிஸ்தான்

16. ஐரோப்பாவின் நிலமானிய முறைக்கு எதிராக பிரித்தானியாவை மையமாகக் கொண்டு மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரம் மேலோங்கியமைக்கு ஏதுவாக அமைந்த புரட்சி
(1) 1688 ஆங்கிலப் புரட்சி (2) 1776 அமெரிக்கப் புரட்சி
(3) 1789 பிரான்சிய புரட்சி (4) 1917 ரஷ்ய புரட்சி

17. பொருளாதர நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பிராந்திய ரீதியாகத் தோற்றம் பெற்ற முதலாவது பொருளாதார அமைப்பாக விளங்குவது
(1) கெட் அமைப்பு (2) ஆசியான் அமைப்பு
(3) உங்டாட் அமைப்பு (4) ஐரோப்பிய ஒன்றியம்

[மூன்றாம் பக்கத்தைப் பார்க்க

18. இலங்கையில் பல்கலாசார சமூகமொன்று உருவாவதற்கு ஏதுவாக அமைந்த குடிபெயர்வு தொடர்பான காரணி
   (1) சேனன் குத்திகனின் ஆக்கிரமிப்பு (2) பண்டுவாசுதேவன் உள்ளிட்ட குழுவினரின் வருகை
   (3) பண்டு பாரிந்த குழுவினரின் வருகை (4) கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

19. சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு பிரதான காரணியாக அமைவது
   (1) காலநிலை மாற்றங்கள் (2) ஓசோன் படையில் ஏற்படும் பாதிப்பு
   (3) பேரழிவுகள் மற்றும் தொற்றுகள் (4) மித மிஞ்சிய வளப்பயன்பாடு

20. 1978 ஆம் ஆண்டு யாப்பின்படி சட்டவாக்கத்துறையின் பணியாக அமைவது
   (1) சட்டத்திற்கு விளக்கமளித்தல் (2) சட்ட உருவாக்கத்திற்கான ஆலோசனை வழங்கல்
   (3) வரவு செலவுத் திட்ட நிர்வாகம் (4) அரசியல் யாப்பைப் பாதுகாத்தல்

21. இலங்கை உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் பொதுச் சுகாதாரம் சார்ந்த பணியாக அமையாதது
   (1) பொதுக்குளியல் இடங்களை நடைமுறைப்படுத்தல் (2) பொதுச் சந்தைகளை பரிபாலித்தல்
   (3) வடிகால்களை அமைத்தலும் திருத்தலும் (4) நீர் நிலைகளைச் சுத்தப்படுத்தல்

22. நுகர்வு, இடைநிலை, மூலதனப் பொருட்களை முறையே கொண்டுள்ள விடைத் தொகுதி
   (1) உரம், இயந்திரசாதனம், மருந்து (2) மருந்து, பலகை, இயந்திரசாதனம்
   (3) இயந்திரசாதனம், மருந்து, பலகை (4) ஆடையணிகள், மருந்து, இயந்திரசாதனம்

23. சர்வதேச மோதலொன்றுக்கு ஏதுவாக அமையும் ஏதேனும் பிரச்சினை தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் அதிகாரம் கொண்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனம் எது?
   (1) பொதுச் சபை (2) நம்பிக்கை பொறுப்புச் சபை
   (3) செயலகம் (4) பாதுகாப்புச் சபை

24. உலகமயமாதல் காரணமாக இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பாதகமான தாக்கங்களுள் ஒன்று
   (1) ஏற்றுமதி பன்முகப்படுத்தல் (2) மூளைசாலிகளின் வெளியேற்றம் துரிதமடைதல்
   (3) சென்மதி நிலுவை சாதகமடைதல் (4) உள்நாட்டு வளங்களிலிருந்து உச்ச பயனடைதல்

25. இலங்கை உள்ளூராட்சி மன்றங்களுள் ஒன்றான மாநகர சபைகள் எக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன?
   (1) 1939 - 61 ஆம் இலக்கச் சட்டம் (2) 1987 - 15 ஆம் இலக்கச் சட்டம்
   (3) 1987 - 42 ஆம் இலக்கச் சட்டம் (4) 1947 - 46 ஆம் இலக்கச் சட்டம்

26. உலகலாவிய ரீதியில் பேசப்படும் மனித உரிமைகளின் அடிப்படைப் பண்புகளாக அமைவது
   (1) நிலைத்திருப்பும் மதிப்பும் (2) பொதுத்தன்மையும் சமத்துவமும்
   (3) சமத்துவமும் நிலைத்திருப்பும் (4) பொதுத்தன்மையும் மதிப்பும்

27. சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நன்னடத்தைப் பண்புகளுள் ஒன்று
   (1) பொதுச் சொத்துகளைப் பாதுகாத்தல் (2) தீவிரவாதத்தை ஒழித்தல்
   (3)சூழலைப் பாதுகாத்தல் (4)போதைப்பொருள் பாவனையிலிருந்து விலகியிருத்தல்

28. சமூக அபிவிருத்தியையும் நல்லாட்சியையும் ஏற்படுத்துவதற்கு பிரஜை ஒருவரால் ஆற்றப்படவேண்டிய பணியொன்றாக அமைவது
   (1) பிராந்தியப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல் (2) தலைவர்களுக்குப் பாதுகாப்பளித்தல்
   (3) கலாசார உரிமைகளைப் பாதுகாத்தல் (4) முரண்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளல்

29. பல்கலாசார சமூகமொன்றின் அடிப்படைப் பண்பாக அமைவது
   (1) ஒரே சமயத்தைப் பின்பற்றும் மக்கள் குழு ஒன்று காணப்படல்
   (2) வரையறுக்கப்பட்ட பிரதேச எல்லை காணப்படல்
   (3) ஒரே இனக்குழுவினராக இருந்தபோதும் பிரதேச ரீதியான வேறுபாட்டைக் கொண்டிருத்தல்
   (4) பூகோளமயமாதல் காரணமாக கலாசார சங்கமத்தில் பின்னடைவு ஏற்படல்

[நான்காம் பக்கத்தைப் பார்க்க

30. இலங்கையிலுள்ள மாவட்ட நீதி மன்றங்களால் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை உள்ளடக்கிய விடைத் தொகுதி

(1) விவாகரத்து, பிரிவினை, கற்பழிப்பு
(2) விருப்பாவண வழக்கு, விவாகரத்து, வீட்டு வாடகை
(3) விருப்பாவண வழக்கு, கொலை, கற்பழிப்பு
(4) விவாகரத்து, கற்பழிப்பு, வீட்டு வாடகை

31. பல்கலாசார சமூகமொன்றில் மக்கள் ஒற்றுமையாக செயலாற்றுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளுள் ஒன்று

(1) ஒரு சமயத்தை மாத்திரம் மதிக்கப் பழகுதல்
(2) பரஸ்பர தொடர்பும் நம்பிக்கையும் விருத்தியடைதல்
(3) பிற சமயங்களை மதிக்கத் தவறுதல்
(4) ஒரு கலாசாரத்தை மாத்திரம் மேம்பாடடையச் செய்தல்

32. பாராளுமன்ற ஆட்சிமுறையின் பண்புகளுள் ஒன்று

(1) நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாக பொறுப்புக் கூற கடமைப்பட்டிருக்கவில்லை
(2) நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதிக்கு உரியது
(3) அரச தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் ஜனாதிபதியாவார்
(4) சட்டத்துறையின் மூலம் நிறைவேற்றுத்துறை தெரிவு செய்யப்படும்

33. ஒற்றை ஆட்சி முறையின் பண்புகளுள் ஒன்று

(1) பன்முகப்படுத்தப்பட்ட நிர்வாக அதிகாரங்களை மத்திய அரசு மீளப் பெறல்
(2) அரச அதிகாரங்கள் மத்திய அரசிடமும் பிராந்திய அரசுகளிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டிருத்தல்
(3) மத்திய அரசின் சட்டத்துறையானது இரு சபைகளால் ஆனது
(4) எழுதப்பட்ட அரசியல் யாப்பு காணப்படல்

34. சட்டத்தின் பிரதான நோக்கங்களாக அமைவன

(1) வாழ்க்கை, தொழில், குடும்பம் என்பவற்றைப் பாதுகாத்தல்
(2) சொத்து, தொழில், உரிமைகள் என்பவற்றைப் பாதுகாத்தல்
(3) வாழ்க்கை, சொத்து, உரிமைகள் என்பவற்றைப் பாதுகாத்தல்
(4) வாழ்க்கை, சொத்து, தொழில் என்பவற்றைப் பாதுகாத்தல்

35. பேண்தகு அபிவிருத்தி எனும் எண்ணக்கருவின்படி மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய காரணி

(1) எதிர்கால சந்ததியினருக்காக வளங்களைப் பாதுகாத்தல்
(2) பொருளாதாரத் தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்து கொள்ளல்
(3) இலாப எதிர்ப்பார்ப்புடன் உற்பத்திகளை மேற்கொள்ளல்
(4) வளங்களின் விளைதிறனை அதிகரித்தல்

36 ஜனநாயகத்தினை சிறந்த வாழ்க்கை முறை ஒன்றாக நடைமுறைப்படுத்துவதற்கான சூழல் பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் கட்டியெழுப்பப்படுகின்றது?

(1) உரிமைகளை அனுபவிப்பதுடன் கடமைகளை நிறைவேற்றல்
(2) பொதுமக்களின் விருப்பின் பேரில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படல்
(3) நாட்டில் பல கட்சி முறை நிலவுதல்
(4) பெரும்பான்மை விருப்பினடிப்படையில் சட்டங்கள் இயற்றப்படல்

37. ஜனநாயக சமூகமொன்றில் உரிமைகள் பெற்றுக் கொடுக்கப்பட்டமைக்கான நோக்கம்

(1) பிரஜை ஒருவருக்கு தனது சுதந்திரத்தை அடைந்து கொள்ளல்
(2) சமூகமொன்றில் சமத்துவத்தினை நடைமுறைப்படுத்தல்
(3) தனிநபர் அபிவிருத்தியினூடாக சமூக அபிவிருத்தியை ஏற்படுத்துதல்
(4) அரசியல் பொருளாதார சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளல்

[ஐந்தாம் பக்கத்தைப் பார்க்க

38. கீழே தரப்பட்டுள்ள விடயங்களுடன் தொடர்புடைய நிறுவனம் எது?

- 1996 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படல்
- ஜனாதிபதியால் நியமிக்கப்படும் 20 பேரை உள்ளடக்கியிருத்தல்
- மக்கள் நேரடியாக முறைப்பாடு செய்ய முடிதல்

(1) மனித உரிமைகள் ஆணைக்குழு (2) நீதிச் சேவை ஆணைக்குழு
(3) பொலிஸ் சேவை ஆணைக்குழு (4) குடியகல்வுத் திணைக்களம்

39. கீழே “அ” நிரலில் சர்வதேச அமைப்புகளும் “ஆ” நிரலில் அவற்றின் தலைமையகங்கள் அமைந்துள்ள நாடு மற்றும் நகரங்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை மிகச் சரியாகத் தொடர்புபடுத்தும் போது பெறப்படும் விடையாக அமைவது

| "அ" | "ஆ" |
|---|---|
| 1. பிம்ஸ்டெக் (BIMSTEC) | A - இந்தோனேஷியாவில் ஜகார்த்தா |
| 2. ஆசியான் (ASEAN) | B – ஐக்கிய அமெரிக்காவில் நிவ்யோர்க் |
| 3. சார்க் (SAARC) | C – பங்களாதேசில் டாக்கா |
| 4. ஐக்கிய நாடுகள் சபை (UNO) | D – நேபாளத்தில் காத்மண்டு |

(1) BDAC (2) CADB (3) CDBA (4) DACB

40. கீழே தரப்பட்டுள்ள கூற்றுகளைக் கருத்திற்கொள்ளுங்கள்.

A – மனிதன் உட்பட அனைத்து உயிரினங்களும் தாவரங்களும், நீர் வாழ் உயிரினங்களும் உயிரியற் சூழலில் உள்ளடங்குகின்றன.

B – புவியில் உள்ள உயிருள்ள, உயிரற்றவை அனைத்தும் இயற்கைச் சூழலில் அடங்குகின்றன.

அவற்றுள்,

(1) A கூற்றினை B கூற்று தெளிவுபடுத்துகின்றது
(2) A கூற்று உண்மையற்றது B கூற்று உண்மையானது
(3) A, B ஆகிய இரு கூற்றுகளும் உண்மையானவை
(4) A கூற்று உண்மையானது B கூற்று உண்மையற்றது

***

[ஆறாம் பக்கத்தைப் பார்க்க

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education

| 62 | T | II |
|---|---|---|

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை (பயிற்சி வினாத்தாள்) – 2025 (2026)

පුරවැසි අධ්‍යාපනය I, II
குடியியற் கல்வி I, II
Civic Education I, II

## குடியியற் கல்வி II

- **முதலாம் வினா** கட்டாயமானது.
- **முதலாம் வினாவுக்கும், வேறு நான்கு** வினாக்கள் உட்பட மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடையெழுதுக.

1.

I. இலங்கையில் தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் கட்சிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

II. இலங்கையில் அரசியல் அதிகாரத்தைப் பரவலாக்கம் செய்வதற்காக உருவாக்கப்பட்டுள்ள நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

III. அனைத்து பொருளாதார முறைகளும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

IV. சர்வதேச சட்டத்துடன் இணைந்த சட்டப்பிரிவுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

V. நாட்டில் தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்தவதற்கான பிரஜையொருவரின் பொறுப்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

VI. சமூகப் பிரச்சினைகளால் எளிதில் பாதிக்கப்படும் **இரு** தரப்பினரைக் குறிப்பிடுக.

VII. இயற்கையாக அமைந்த புவிச்சூழலின் அழிவுக்குக் காரணமாக அமையும் **இரு** செயற்பாடுகளும் யாவை?

VIII. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் காணப்படும் வறுமை நிலை தொடர்வதற்குக் காரணமாக அமையும் நச்சுவட்டத்தின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

IX. நாடொன்றிற்கான வெளிநாட்டு உதவி முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

X. அரசியல் மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**($02 \times 10 = 20$ புள்ளிகள்)**

2. ''மக்களது கருத்துகளுக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் மக்கள் பங்குபற்றுதல் காணப்படும் பிரதிநிதித்துவ ஜனநாயக முறையானது நவீன அரசியலில் முக்கிய ஆட்சி முறையொன்றாக மாறியுள்ளது.''

I. ஜனநாயக ஆட்சி முறையின் கீழ் மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் தேர்தல் முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

II. சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலின் பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

III. (a) ஜனநாயக ஆட்சி முறையானது வெற்றியளிப்பதற்காக எதிர்க்கட்சி ஒன்றினால் ஆற்றப்பட வேண்டிய பணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(b) ''சமூகமொன்றின் அடிப்படை அரசியல் அமைப்பாக விளங்குவது அரசாகும்.'' அரசினால் மக்களுக்கு ஆற்றப்படவேண்டிய பணிகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அதில் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. **(03 புள்ளிகள்)**

[ஏழாம் பக்கத்தைப் பார்க்க

3. ''பல்வேறு கலாசாரங்களைப் பின்பற்றும் மக்கள் குழுக்கள் ஒன்றுபட்டு வாழும்போது சக்திமிக்க தேசமொன்று கட்டியெழுப்பப்படுகின்றது.''

I. இலங்கை மக்கள் பின்பற்றும் சமயங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

II. பல்கலாசார சமூகமொன்றில் நல்லாட்சியை முன்னெடுப்பதற்கான ஆட்சியாளர்களின் கடமைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

III. (a) பல்கலாசார சமூகமொன்றின் நிலைத்திருப்பிற்குப் பாதிப்பாக அமையும் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(b) நீங்கள் மேலே குறிப்பிட்ட பாதகமான காரணிகளால் ஏற்படக்கூடிய விளைவுகளை இழிவளவாக்கிக்கொள்ள மாணவர் என்ற வகையில் உம்மால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அதில் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. **(03 புள்ளிகள்)**

4. ''உலகின் அபிவிருத்திச் செயற்பாடுகளின்போது ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கும் சக்தியொன்றாக மோதல்களை இனங்காண முடியும்''

I. மோதல் ஏற்படுவதற்குக் காரணமாக அமையும் அசாதாரண மனித நடத்தைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

II. மோதல் தீர்த்தல் முறையொன்றான ஆலோசனை வழிகாட்டலின்போது மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

III. (a) மோதல் தீர்வு தொடர்பாக பிரஜை ஒருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(b) மோதல்களை சமாதானமாகத் தீர்ப்பதனால் கிடைக்கும் நன்மைகளுள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அதில் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. **(03 புள்ளிகள்)**

5. ''சட்டம் பற்றிய விளக்கத்தினைக் கொண்டுள்ள பிரஜையொருவர் நியாயமானதும், பக்கசார்பற்றதுமான நீதியினைப் பெற்றுக் கொள்ளும் உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்கிறார்.''

I. இலங்கையில் நடைமுறையிலுள்ள பொதுச் சட்டத்திற்கு மேலதிகமாக நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

II. சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட்ட சமூகமொன்றில் காணக்கூடிய பண்புகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

III. (a) நாட்டில் தாமதமின்றியும், பக்கசார்பின்றியும் நீதி நிலைநாட்டப்படுவதால் ஏற்படும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(b) நீங்கள் சட்டத்தை மதிக்கும் பிரஜையொருவராக வாழ்வதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அதில் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. **(03 புள்ளிகள்)**

6. ''மனிதன் உள்ளிட்ட அனைத்து விலங்கினங்கள், தாவரவகைகள் மற்றும் உயிருள்ள, உயிரற்ற அனைத்திற்குமிடையே காணப்படும் தொடர்பானது அனைவரதும் நிலைத்திருப்பிற்கு உபகாரமாய் அமைகின்றது''

I. இயற்கை முறையில் வளி மாசடையும் வழிமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

II. சமூகச் சூழல் பாதிப்படைவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

III. (a) சூழல் தொடர்பான பிரஜைகளின் பொறுப்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(b) சூழலைப் பாதுகாப்பதற்குப் பாடசாலை மாணவர் என்ற வகையில் நீர் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு, அதில் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. **(03 புள்ளிகள்)**

[எட்டாம் பக்கத்தைப் பார்க்க

7. ‘‘உலகில் தற்போது எந்தவொரு நாடேனும் தனித்து விடப்படாது தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக ஏனைய நாடுகளின் உதவியைப் பெற்றுக் கொள்கின்றன.’’

I. சர்வதேச உறவுகள் மேற்கொள்ளப்படும் **இரு** பிரதான வழிமுறைகளும் எவை? **(02 புள்ளிகள்)**

II. சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. **(03 புள்ளிகள்)**

III. (a) சர்வதேச ரீதியில் உறவுகளைக் கட்டியெழுப்புவதால் கிடைக்கும் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. **(02 புள்ளிகள்)**

(b) அபிவிருத்தியடைந்துவரும் நாடென்றவகையில் இலங்கையானது சர்வதேச உறவுகளை மேம்படுத்திக் கொள்வதனால் கிடைக்கப் பெற்றுள்ள நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு அதில் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக. **(03 புள்ளிகள்)**

***

අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education


G. C. E. Ordinary Level | අ. පො. ස. සාමාන්‍ය පෙළ 2025(2026)

# අනුහුරු ප්‍රශ්න පත්‍රය සඳහා පිළිතුරු පත්‍රය (දෙමළ මාධ්‍යය)
# Answer Sheet for the model paper
# பயிற்சி வினாத்தாளுக்கான விடைத்தாள்

# පුරවැසි අධ්‍යාපනය

## CIVIC EDUCATION - குடியியற் கல்வி




## Answer Paper – I, II පිළිතුරු පත්‍රය – I, II (දෙමළ මාධ්‍යය)


අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන හා වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය
ජාතික භාෂා හා මානව ශාස්ත්‍ර ශාඛාව
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு
Ministry of Education, Higher Education and Vocational Education
National Languages and Humanities Branch

## குடியியற் கல்வி I - விடைத்தாள்

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 3 | 11. | 2 | 21. | 1 | 31. | 2 |
| 02. | 1 | 12. | 3 | 22. | 2 | 32. | 4 |
| 03. | 2 | 13. | 4 | 23. | 4 | 33. | 1 |
| 04. | 4 | 14. | 1 | 24. | 2 | 34. | 3 |
| 05. | 4 | 15. | 3 | 25. | 4 | 35. | 1 |
| 06. | 1 | 16. | 1 | 26. | 2 | 36. | 1 |
| 07. | 3 | 17. | 4 | 27. | 4 | 37. | 3 |
| 08. | 3 | 18. | 2 | 28. | 4 | 38. | 1 |
| 09. | 2 | 19. | 4 | 29. | 3 | 39. | 2 |
| 10. | 3 | 20. | 3 | 30. | 2 | 40. | 3 |

(மொத்தப் புள்ளி $1 \times 40 = 40$)

## குடியியற் கல்வி II - விடைத்தாள்

1.

I.

- மக்கள் விடுதலை முன்னணி
- ஐக்கிய தேசிய கட்சி
- ஐக்கிய மக்கள் சக்தி
- இலங்கை தமிழரசுக் கட்சி

**(இது போன்ற ஏதேனும் இரண்டு விடைகள்)**

II.

- மாகாண சபைகள்
- உள்ளூராட்சி நிறுவனங்கள்
- திணைக்களங்கள்
- கூட்டுத்தாபனங்கள்
- சபைகள்
- அதிகார சபைகள்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடைகள்)**

III.

- எதனை எந்தளவு உற்பத்தி செய்வது?
- எவ்வாறு உற்பத்தி செய்வது?
- யாருக்காக உற்பத்தி செய்வது?

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடைகள்)**

IV

- சர்வதேச மனித உரிமைகள் சட்டம்
- முதலீட்டுச் சட்டம்
- சமுத்திரச் சட்டம்
- சுற்றாடல் சட்டம்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடைகள்)**

v.

- பயனுள்ள தொழிலொன்றில் ஈடுபடுதல்
- இலஞ்சம், ஊழல், வீண்விரயம் போன்றவற்றைத் தடுத்தல்
- சுதந்திரம், நீதி, உரிமைகளைப் பாதுகாத்தல்
- தேசிய அபிமானம் மற்றும் தேசிய மரபுரிமைகளைப் பாதுகாத்தல்
- அரசின் சமூக நலன்புரி சேவைகளை முறையான வகையில் பயன்படுத்தல்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடைகள்)**

VI.

- பெண்கள்
- பிள்ளைகள்
- அங்கவீனர்கள்
- தொழிலாளர்கள்
- ஆதிவாசிகள் **(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடைகள்)**

VII

- இயற்கை செயற்பாடு
- மனித செயற்பாடு

VIII.

- குறைந்த வருமானம்
- உயர்வான நுகர்வுச் செலவு
- குறைந்த சேமிப்பு
- குறைந்த முதலீடு
- குறைந்த உற்பத்தி **(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடைகள்)**

IX.

- நன்கொடை
- கடன்
- பொருட்களும் சேவைகளும் **(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடைகள்)**

X.

- எல்லைப் பிரச்சினை
- அதிகாரப் பரம்பல்

**(02 × 10 = 20 புள்ளிகள்)**

2.
I.

- எளிய பொரும்பான்மை பிரதிநிதித்துவ முறை
- விகிதாசார பிரதிநிதித்துவ முறை **(02 புள்ளிகள்)**

II.

- குறித்த காலத்தில் தேர்தல் நடைபெறல்
- உரிய தகுதியுடையோருக்கு வாக்காளராவதற்கும் வேட்பாளராவதற்குமான உரிமை காணப்படல்

- சுதந்திரமாக தேர்தல் செயற்பாடுகளில் ஈடுபடல்
- தேர்தல் சட்டதிட்டங்களுக்கமைய தேர்தல் நடைபெறல்
- சுமுகமான சூழலில் தேர்தல் நடைபெறல்

**(இவற்றுள் ஏதேனும் மூன்று விடயங்களைக் குறிப்பிட்டிருத்தல் - 03 புள்ளிகள்)**

III. (a)

- ஆளுங்கட்சியினது சிறந்த செயற்பாடுகள் வெற்றியளிப்பதற்கு ஒத்துழைப்பினை வழங்குதல்
- அபிவிருத்திக்கான விமர்சனங்களை முன்வைத்து ஆளுங்கட்சியை நல்வழிப்படுத்தல்
- ஆளுங்கட்சியின் ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தல்
- மிகச் சிறப்பான மாற்று ஆட்சியை அமைப்பதற்காக செயற்படல்

**(இது போன்ற ஏதேனும் இரண்டு விடைகள் - 02 புள்ளிகள்)**

(b)

- சட்டம், சமாதானத்தைப் பாதுகாத்தல்
- சமூக நல சேவைகளை வழங்கல்
- வறுமையை ஒழிக்க நடவடிக்கை எடுத்தல்
- பொதுச் சேவைகளை நடாத்திச் செல்லல்
- அபிவிருத்தி செயற்திட்டங்களைச் செயற்படுத்தல்
- போர், வன்முறைகள், இன முரண்பாடுகளை களைதல்
- அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும் - 03 புள்ளிகள்)**

3.

I.

- பௌத்தம்
- இந்து
- இஸ்லாம்
- கிறிஸ்தவம் / கத்தோலிக்கம்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருத்தல் - 02 புள்ளிகள்)**

II.

- மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி பாதுகாக்கப்படும் வகையில் செயற்படல்
- சட்டத்தை மதித்து வெளிப்படையாகச் செயற்படல்
- இலஞ்சம், ஊழலற்றதாக பொறுப்புடன் செயற்படல்

**(இது போன்ற ஏதேனும் மூன்று விடைகள் - 03 புள்ளிகள்)**

III. (a)

- ஒருவரையொருவர் மதிக்காமை
- ஏனைய கலாசாரங்கள் பற்றிய புரிந்துணர்வின்மை
- ஏனைய சமயங்களை அவமதித்தல்
- அனைத்து சந்தர்ப்பங்களிலும் மோதல் ஏற்படும் வகையில் செயற்படல்
- ஒற்றுமையாக செயலாற்றாமை

- சமத்துவத்தை மதிக்காமை

**(இது போன்ற ஏதேனும் இரண்டு விடைகள் - 02 புள்ளிகள்)**

(b)

- ஏனைய கலாசாரங்களை மதித்தல்
- சமத்துவமாக செயற்படல்
- பிறர் கருத்துக்களைச் செவிமடுத்தல்……
**(பாடசாலை மாணவர் என்ற வகையில் இது போன்று மேற்கொள்ளக்கூடிய ஏதேனும் நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை விளக்கியிருத்தல் வேண்டும் - 03 புள்ளிகள்)**

4.

I.

- பதகளிப்பு
- பதற்றம்
- முன்கோபம்
- சகிப்புத் தன்மையின்மை
- தகாத வார்த்தைப் பிரயோகம்
- வன்முறை
- காயமேற்படும் வகையில் தாக்குதல்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருத்தல் - 02 புள்ளிகள்)**

II.

- மாற்று வழிகளை அறிமுகப்படுத்தல்
- மோதலின் மூலம் ஏற்படும் விளைவு மற்றும் அழுத்தநிலை பற்றி இரு தரப்பினரையும் அறிவூட்டல்
- மோதலின் இறுக்கத்தைத் தளர்த்துதல் **(03 புள்ளிகள்)**

III. (a)

- புரிந்துணர்வு
- பொறுமை
- கருணை
- அனுபவ முதிர்ச்சி
- பயனுள்ள தொடர்பாடல்
- பரிவுணர்வு
- அகிம்சைப் பண்பு

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருத்தல் - 02 புள்ளிகள்)**

(b)

- உயிராபத்தைத் தடுத்தல்
- வளங்கள், சொத்துக்களுக்கான ஆபத்தைத் தடுத்தல்
- மனித உரிமைகளைப் பாதுகாத்தல்
- உளவியல் பதகளிப்பைக் குறைத்தல்
- தனிநபர் உளப்பண்பு மேன்மையுறல்
- சுய கௌரவம் பாதுகாக்கப்படல்
- அரசியல் உறுதிப்பாடு

- பொருளாதார உறுதிப்பாடு
- இனங்களுக்கடையே ஐக்கியம் ஏற்படல்
- நாடு செழிப்படைதல்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும் - 03 புள்ளிகள்)**

5.

I.

- கண்டியச் சட்டம்
- தேசவழமைச் சட்டம்
- முஸ்லிம் தனியார் சட்டம்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிட்டிருத்தல் - 02 புள்ளிகள்)**

II.

- நீதித்துறை சுதந்திரமாகச் செயற்படல்
- சகல பிரஜைகளும் சட்டம் பற்றிய அறிவினைப் பெற்றிருத்தல்
- நேர்மையாகவும் தாமதமின்றியும் நீதியைப் பெற்றுக் கொள்ளல்
- சட்டத்தின் முன் சகலரும் சமமாக மதிக்கப்படல்
- நீதிபதிகளின் தீர்ப்புகளில் புறச் செல்வாக்கு, தலையீடுகள் இல்லாதிருத்தல்

**(இது போன்ற ஏதேனும் மூன்று விடைகள் - 03 புள்ளிகள்)**

III. (a)

- தனிநபர்களுக்கிடையே நீதித்துறை மற்றும் சட்டம் பற்றிய நம்பிக்கை ஏற்படல்
- நீதி முன்னிலை வகித்தல்
- நாட்டினுள் குற்றங்களும் ஊழல்களும் குறைதல்
- சட்டத்தின் சமநிலை பாதுகாக்கப்படல்
- நீதியைப் பெற்றுக் கொள்ள உரிய முறைகளைப் பின்பற்றல்
- நீதியைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் நீண்ட காலம், சிரமம், பாரிய செலவு ஏற்படாமை
- மக்கள் மத்தியில் சட்டம், நீதி பற்றிய மதிப்புணர்வு ஏற்படல்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருத்தல் - 02 புள்ளிகள்)**

(b)

- ஒவ்வொருவரிடத்திலும் ஒற்றுமை, நம்பிக்கை கட்டியெழுப்பப்படல்
- ஏனைய சமயங்களை மதிக்கக்கூடிய பிரஜைகள் உருவாதல்
- உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடையக்கூடியதாக இருத்தல்
- உரிமைகள் பாதுகாக்கப்படல்
- பொருளாதார உறுதி கட்டியெழுப்பப்படல்
- வாழ்வதற்குப் பொருத்தமான சமாதானச் சூழல் உருவாதல்

**(இவ்வாறான இரு விடயங்களைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும் - 03 புள்ளிகள்)**

6.

I.

- எரிமலை வெடிப்பு
- காட்டுத்தீ
- புழுதிப் புயல்

**(இவற்றுள் ஏதேனும் இரண்டு விடயங்களைக் குறிப்பிட்டிருத்தல் - 02 புள்ளிகள்)**

II.

- சமூகத் தொடர்பு சீர்குலைதல்
- சமய மற்றும் இன மோதல் ஏற்படல்
- சமூக அநீதி ஏற்படல்
- குடும்ப அமைப்பு சீர்குலைதல்
- பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையிலான தொடர்புகள் சீர்குலைதல்
- சமூக ஒழுக்கக்கேடுகள் அதிகரித்தல்
- சமூக விரோத செயல்கள் அதிகரித்தல்

**(இவற்றுள் ஏதேனும் மூன்று விடயங்களைக் குறிப்பிட்டிருத்தல் - 03 புள்ளிகள்)**

III. (a)

- சுற்றாடல் வளங்களை சிக்கனமாகப் பயன்படுத்தல்
- கழிவுப் பொருட்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்தல்
- உக்காத கழிவுப் பொருட்களை சூழலுக்கு விடுவிப்பதைத் தவிர்த்தல்
- வீடு மற்றும் அயற்சூழலைப் பாதுகாத்தல்
- சூழலின் இருப்பையும் அதன் முக்கியத்துவத்தையும் உணர்ந்து செயற்படல்
- சூழல் பாதுகாப்பு தொடர்பில் ஏனைய நபர்களை அறிவூட்டுதல்
- சூழல் நேய வாழ்க்கையைப் பின்பற்றுதல்

**(இது போன்ற ஏதேனும் இரண்டு விடைகள் - 02 புள்ளிகள்)**

(b)

- கழிவுப் பொருட்களை முறையாக அகற்றுதல்
- மர நடுகை செயற்பாடுகளை மேற்கொள்ளல்
- சூழல் பாதுகாப்பு பற்றி சமூகத்திற்கு விழிப்பூட்டுதல்……
  **(இவ்வாறான இரு விடயங்களைக் குறிப்பிட்டு அதில் ஒன்றினை சுருக்கமாக விளக்கியிருத்தல் வேண்டும் - 03 புள்ளிகள்)**

7.

I.

- இராஜ தந்திர உறவுகள்
- விரதியல் உறவுகள் **(02 புள்ளிகள்)**

II.

- ஒவ்வொரு நாட்டிலும் காணப்படும் வளங்களின் வேறுபாடு
- அனைத்துத் தேவைகளையும் தமது நாட்டினுள்ளே பூர்த்தி செய்து கொள்ள முடியாமை
- மேலதிக உற்பத்திகளைச் சந்தைப்படுத்தல்
- போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் விருத்தி
- நவீன தொழிநுட்பத்தினை பெற்றுக் கொள்வதன் அவசியம்
- அனர்த்த, இடர்களின் போது நிவாரணம் பெறல்
- அரசியல், பொருளாதார, சமூக, கலாசார தொடர்புகளை விருத்தி செய்து கொள்ளல்.

**(இவற்றுள் ஏதேனும் மூன்று விடயங்களைக் குறிப்பிட்டிருத்தல் - 03 புள்ளிகள்)**

III. (a)

- சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைதல்
- புதிய தொழில் வாய்ப்புகள் உருவாதல்
- அவசர நிலைமையின் போது நன்கொடை, உதவி பெறப்படல்
- புதிய தொழிநுட்ப அறிவுப் பரிமாற்றம்

**(இது போன்ற ஏதேனும் இரண்டு விடைகள் - 02 புள்ளிகள்)**

(b)

- கடன் மற்றும் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்
- சர்வதேச வர்த்தகத்தில் பங்கு கொள்ளல்
- தேசிய பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளல்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ளல்
- சுற்றுலாக் கைத்தொழிலை விருத்தி செய்தல்
- அவசர நிலமைகளின்போது உதவிகளைப் பெற்றுக் கொள்ளல்
- தொழிநுட்ப அறிவைப் பரிமாற்றிக் கொள்ளல்.........

**(இது போன்ற ஏதேனும் இரு காரணிகளைக் குறிப்பிட்டு அதில் ஒன்றை விளக்கியிருத்தல் வேண்டும் - 03 புள்ளிகள்)**